# மாகாணக் கல்வித் திணைக்களம் – வடக்கு மாகாணம்

## கா.பொ.த (சாதாரணதர)ப்பரீட்சை – 2019

## இரண்டாம் தவணை

| வரலாறு | 33 | T | 1 | நேரம் - ஒரு மணித்தியாலம் |
|---|---|---|---|---|

சுட்டெண் ........................................

**கவனிக்க:-**

(i) *எல்லா வினாக்களிற்கும் விடை எழுதுக.*

(ii) *1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.*

(iii) *உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி இடுக.*

1. அநுராதபுரக்காலம் முதல் கோட்டை இராசதானி ஆரம்பம் வரையிலான காலப்பகுதியில் எழுதப்பட்ட அதிகளவான நூல்கள் பின்வரும் எந்த நோக்கத்தோடு எழுதப்பட்டவையாகும்.
   1) அரசியல் 2) சமயம் 3) வர்த்தகம் 4) ஆக்கிரமிப்பு

**2.** இலங்கைக்கு வருகை தந்து நேரடி அனுபவங்களைப் பெற்று இலங்கை பற்றி எழுதிய எழுத்தாளர்களில் **அடங்காதவர்**
   1) மெகஸ்தனிஸ் 2) ரிபைரோ 3) பிலிப்ஸ் பல்டியல் 4) இபன்பதூதா

3. புராதன காலத்தில் நாட்டின் பொருளாதார நிலை, வர்த்தகம், தொழில்நுட்ப அறிவு போன்றவற்றை அறியப் பயன்படும் மூலாதாரங்கள்
   1) கல்வெட்டுக்கள் 3) நாணயங்கள்
   2) புரதான சிதைவுகள் 4) செதுக்கல்கள்

4. பின்வரும் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதர் வாழ்ந்த கற்குகைகளில் தாழ்நில உலர்வலயக் குகை எது?
   1) பாகியன்கல 3) பதிராஜவெல
   2) பெல்லன் பதி பெலஸ்ஸ 4) அலிகல

5. ஆரம்ப வரலாற்றுக்கால இலங்கையில் கி.மு 250 ஆம் ஆண்டளவில் எழுதப்பட்ட பிராமி கல்வெட்டொன்றில் "புரகமத்த" எனும் பதவிப்பெயர் ஒன்றின் மூலம் அறியப்பட்ட விடயம் யாதெனில் அது நகரத்தின்
   1) பிரதான கட்டட கலைஞரைக் குறிப்பிடுகின்றது
   2) பிரதான சிற்பக் கலைஞரைக் குறிப்பிடுகின்றது
   3) பிரதான நடனக் கலைஞரைக் குறிப்பிடுகின்றது
   4) பிரதான செதுக்கல் கலைஞரைக் குறிப்பிடுகின்றது

6. பின்வரும் மன்னர்களுள் தன்னை குபேரக் கடவுளாக கருதிக் கொண்டவர் யார்?
   1) நிஸ்ஸங்க மல்ல 3) முதலாம் காசியப்ப
   2) குட்ட கண்ண அபய 4) மகாசேனன்

- **பின்வரும் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 7ஆம் 8ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.**

A- மாந்தை சர்வதேச துறைமுகத்தை அக்கால அனுராதபுர ஆட்சியாளனான எல்லாளனிடம் இருந்து மீட்டுக் கொண்டமை

B- அரச வரி அறவீடு முறைப்படுத்தப்பட்டதுடன் நாட்டை நிர்வாக அலகுகளாகப் பிரித்து நிர்வகிப்பதற்கு முயற்சி செய்தமை

C- அநுராதபுரத்துக்கு பதிலாக பொலனறுவையை தனது தலைநகராக மாற்றிக் கொண்டமை

D- இலங்கையின் வரலாற்றில் முதலாவது ஒழுங்கமைக்கப்பட்ட யுத்த செயற்பாட்டிற்கு தலைமைத்துவத்தை வழங்கியமை

E. யுத்த நடவடிக்கை மூலம் சோழர்களை தோல்வியடையச் செய்து நாட்டை மீண்டும் ஐக்கியப்படுத்தியமை

7. மேற்கூறிய கூற்றுக்களுள் துட்டகைமுனு மன்னனுடன் தொடர்புடையவை
   1) A, C 2) A, D 3) C, E 4) B, C



பக்கம் 2 ஐப் பார்க்க

kalvi.lk

8. மேற்கூறப்பட்ட கூற்றுக்களுள் 1ம் விஜயபாகு மன்னனுடன் தொடர்புடையவை
   1) A, C 2) A, D 3) C, E 4) B, C
9. இலங்கையில் புராதன சமூகத்தில் அனுராதபுர விவசாயிகள் சில காலம் பயிரிடப்பட்டு கைவிடப்பட்ட பின்னர் மீளவும் பயிரிடப்படும் சேனைகளை எப்பெயர் கொண்டு அழைத்தனர்
   1) நவதெனி 2) பிடபிம் 3) செஹென் 4) கனத்த
10. கண்டிக் காலத்திற்குரிய வேதிகிரிய தேவாலயத்திற்கு அருகில் காணப்பட்ட கல்வெட்டு ஒன்றில் "தடிக சுமண" எனும் கலைஞரைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது இவருடன் தொடர்புடைய கைத்தொழில்
    1) நெசவு
    2) மட்பாண்டம் வனைதல்
    3) தந்தச் செதுக்கல்
    4) இரத்தினக்கல் அகழ்வு
11. புராதன காலத்தில் நில அளவீட்டில் பயன்படுத்தப்பட்ட அளவை முறை எது?
    1) கரீசை 2) அணு 3) உசக்க 4) தரண

- **கீழே A தொடக்கம் F வரையில் குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 12 ஆம் 13 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.**

A- நவநீதம்
B- உலோகக் கத்தரிக்கோல்
C- கழிவுப் பொருள் முகாமை
D- வஜ்ரசும்மட்ட
E- ரன்சிரியல்
F- மருத்துவ ஓடம்

12. ரூவான் வெலிசாய தூபியுடன் தொடர்புடைய அம்சங்களைக் கொண்ட விடை எது?
    1) A, B, F 2) A, D, F 3) B, D, E 4) A, D, E
13. ஆலாஹன பிரிவேனாவுடன் தொடர்புடைய அம்சங்களைக் கொண்ட விடை எது?
    1) B, C, F 2) B, C, E 3) A, B, C 4) B, C, D
14. மகா பராக்கிரமபாகு மன்னனின் பிறந்த இடமான தெடிகமவின் பழைய பெயர்
    1) மாகம 2) காகம 3) புங்ககாம 4) உருவெலகம
15. உரிய காலத்தில் அறுவடை செய்யத்தவறும் நபர்களுக்கு ஐந்து கலங் அபராதமாகச் செலுத்துமாறு கூறப்பட்டமை தொடர்பான சட்டம் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு
    1) கொடவாய தூண் கல்வெட்டு
    2) சித்துல்பவ்வ கல்வெட்டு
    3) பதுளைத் தூண் கல்வெட்டு
    4) கொண்ட வட்டவான் தூண் கல்வெட்டு
16. பாதியதிஸ்ஸ மன்னன் காலத்தில் தனது குடும்பத்திற்குச் சொந்தமான நிலபுலங்களின் ஒரு பகுதியை பௌத்த விகாரைக்கு வழங்கியதாகக் கூறப்படும் பெண்
    1) தலுதா லஷ்மி 2) அசோகமாலா 3) விகாரா மாதேவி 4) சுமனா
17. குருநாகல் இராசதானியில் நான்காம் பராக்கிரமபாகு மன்னன் கி.பி 1302 இல் ஆட்சி பீடமேறியதாகக் குறிப்பிடும் நூல்
    1) கவிசிலுமின 2) சரசோதிமாலை 3) குந்திலகாவியம் 4) பூஜாவலிய
18. இபின்பதூதா எனும் அராபிய தேச சஞ்சாரி இலங்கைக்கு வருகை தந்தது பின்வரும் எந்த இராசதானிக் காலத்திலாகும்
    1) தம்பதெனியா 2) யாப்பகுவ 3) குருநாகல் 4) கம்பளை
19. கீழே A, B, C, D எனக் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகளில் 1ம் பராக்கிரமபாகு மன்னன் பொலநறுவையை ஆட்சி செய்த காலப் பகுதியில் வாழ்ந்த ஒருவருக்கு அறிந்து கொள்ள முடியாத நிகழ்வுகளை உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.
    A- அபயகிரி விகாரை அமைக்கப்பட்டமை
    B- சந்திரபானு இலங்கை மீது படையெடுத்தமை
    C- இலங்கை சோழராட்சியில் இருந்து விடுவிக்கப்பட்டமை
    D- சீனாவில் யுங்லோ எனும் பேரரசனால் அனுப்பப்பட்ட செங்கோ எனும் தளபதி இலங்கை மீது ஆக்கிரமித்தமை
    1) Aயும் Bயும் 2) Bயும் Cயும் 3) Bயும் Dயும் 4) Cயும் Dயும்
20. கண்டி இராச்சியத்தின் முதலாவது நாயக்க வம்சத்து மன்னன்
    1) ஸ்ரீ விஜய இராஜசிங்க மன்னன்
    2) ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்க மன்னன்
    3) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன்
    4) இராஜாதி இராஜசிங்க மன்னன்


பக்கம் 3 ஐப் பார்க்க
kalvi.lk

✷ வெலிவிட்ட ஸ்ரீசரணங்கர பிக்குவிற்கு சங்கராஜா பதவி வழங்கியமை

✷ கி.பி 1638 இல் கன்னொருவைப் போரில் போத்துக்கேயரை தோல்வி அடையச் செய்தமை

21. மேற்குறித்த இருதகவல்களுடன் தொடர்புடைய கண்டி மன்னர்கள் முறையே
    1) இரண்டாம் இராஜசிங்கன், முதலாம் விமலதர்மசூரியன்
    2) முதலாம் விமலதர்மசூரியன், இரண்டாம் இராஜசிங்கன்
    3) இரண்டாம் இராஜசிங்கன், கீர்த்தி ஸ்ரீராஜசிங்கன்
    4) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன், இரண்டாம் இராஜசிங்கன்
22. முதலாம் விஜயபாகு மன்னனின் கூலிப்படையினரான வேளைக்காரப் படையினர் எங்கிருந்து இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்
    1) கலிங்கதேசம் 2) கேரளதேசம் 3) சேரநாடு 4) சோழநாடு
23. குளக்கட்டிற்கு பாதிப்பு ஏற்படாதவகையில் குளத்தில் காணப்படும் மேலதிக நீரை வெளியேற்ற உதவும் தொழில்நுட்பக் கூறு
    1) சுருங்கை 2) கலிங்கல் 3) அலைதாங்கி 4) கலிங்கல்தொட்டி
24. போத்துக்கேயர் கண்டி இராசதானியைக் கைப்பற்றும் பொருட்டு மேற்கொண்ட போர்களில் ரந்தெனிவெலப் போருக்கு தலைமை தாங்கிய போத்துக்கேய கப்பித்தான் ஜெனரல்
    1) தொன் ஜெரோனி மோ.த.அசவேது
    2) தியோகோ.த. மெல்லோ. கஸ்ரோ
    3) ஜெரோ லோபேஸ் த சூசா
    4) கொன்ஸ்தாந்தினு த.சா

- **அட்டவணையை அவதானித்து 25ஆம், 26 ஆம், 27 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| A. போலந்து | D. புவியீர்ப்பு விசை | G. ஜொஹேனஸ் கூடன் பேர்க் |
| B. ஜேர்மனி | E. அச்சியந்திரம் | H. நிக்கலஸ் கொபர்னிகஸ் |
| C. இங்கிலாந்து | F. புவி கோளவடிவானது | I. ஐசக் நியூட்டன் |

25. நிரல் II இல் E யுடன் தொடர்புடைய மறுமலர்ச்சிக்கால விஞ்ஞானியையும் அவரது தாய்நாட்டையும் குறிக்கும் விடை
    1) G, B 2) G, C 3) H, A 4) I, B
26. நிரல் III இல் H உடன் தொடர்புடைய விஞ்ஞானக் கண்டுபிடிப்பையும் அவரது தாய்நாட்டையும் குறிக்கும் விடை
    1) D, B 2) F, A 3) E, C 4) F, C
27. நிரல் II இல் Dயுடன் தொடர்புடைய மறுமலர்ச்சிக்கால விஞ்ஞானியையும் அவரது தாய்நாட்டையும் குறிக்கும் விடை
    1) G, A 2) H, C 3) I, C 4) I, B
28. இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் பிரித்தானியர் ஆட்சியின் போது நியமிக்கப்பட்ட முதலாவது பிரித்தானிய ஆளுநர்
    1) தோமஸ் மெயிட்லண்ட்
    2) பிரட்றிக் நோத்
    3) றொபட் பிரௌன்றிக்
    4) எட்வேட் பாண்ஸ்
29. 1885 ஆம் ஆண்டு டெம்லர் என்பவரால் மோட்டார் வண்டி (கார்) கண்டுபிடிக்கப்பட்டது. இவர் எந்த நாட்டை பிறப்பிடமாகக் கொண்டவர்
    1) அமெரிக்கா 2) இங்கிலாந்து 3) இத்தாலி 4) ஜேர்மனி

- **கீழே A தொடக்கம் F வரையிலான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 30ஆம் 31 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

A- கட்டாய இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டமை

B- வரையறுக்கப்பட்ட வாக்குரிமை

C- பொதுசன அபிப்பிராய தேர்தல் முறை

D- நிர்வாகக் குழுமுறை

E- ஆளுநர் நாயகம் பதவி

F- தேசிய அரசுப் பேரவை



kalvi.lk

30. சோல்பரி அரசியல் யாப்புச் சீர்திருத்தம் மற்றும் டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் ஆகியவற்றுடன் தொடர்புடைய தகவல்களை முறையே உள்ளடக்கிய விடை
    1) Eயும் Dயும் 2) Fஉம் Dயும் 3) Bயும் Cயும் 4) Fஉம் Cயும்
31. 1972 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு சீர்திருத்தம் 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் ஆகியவற்றுடன் தொடர்புடைய தகவல்களை முறையே உள்ளடக்கிய விடை
    1) Eயும் Dயும் 2) Aயும் Cயும் 3) Fஉம் Cயும் 4) Eயும் Cயும்
32. இலங்கை கம்பியூனிஸ்ட் கட்சியை உருவாக்கிய தலைவர்
    1) கொல்வின் R.D சில்வா
    2) எஸ். ஏ விக்கிரமசிங்க
    3) பிலிப் குணவர்த்தன
    4) கலாநிதி N.M பெரேரா

- கீழே A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள சோடிக் கூற்றுக்களை அல்லது சோடிச் சொற்களை அவதானித்து 33 தொடக்கம் 35 வரையான வினாக்களுக்கு விடை தருக.

A)1. எட்வேர்ட் பாண்ஸ்
   2. கோப்பிச் செய்கை

B)1. இலங்கை மீது ஆங்கிலேயர் கவனம்
   2. மொகாலயப் பேரரசு

C)1. மேற்கு இந்தியத் தீவுகள்
   2. பேர்டினன்ட் மன்னன், இசபெலா இளவரசி

D)1. 1766 ஒல்லாந்தர் உடன்படிக்கை
   2. இரண்டாம் இராஜசிங்கன்

33. இரண்டாவதன் வீழ்ச்சி முதலாவதன் எழுச்சிக்கு காரணமாக அமைவதனை எடுத்துக் காட்டும் சோடிக் கூற்றுக்கள்/சோடிச் சொற்களைக் கொண்ட விடை
    1) A 2) B 3) C 4) D
34. முதலாவதன் செயற்பாடு இரண்டாவதன் வளர்ச்சிக்கு காரணமாக அமைவதனை எடுத்துக் காட்டும் சோடிக் கூற்றுக்கள்/சோடிச் சொற்களைக் கொண்ட விடை
    1) A 2) B 3) C 4) D
35. முதலாவதிற்கும் இரண்டாவதிற்கும் இடையே எவ்வித தொடர்பின்மையைக் காட்டும் சோடிக் கூற்றுக்கள்/சோடிச் சொற்களைக் கொண்ட விடை
    1) A 2) B 3) C 4) D
36. இரண்டாவதன் அனுசரணை காரணமாக முதலாவது கண்டுபிடிக்கப்பட்டமையை காட்டும் சோடிக் கூற்றுக்கள்/சோடிச் சொற்களைக் கொண்ட விடை
    1) A 2) B 3) C 4) D
37. மாளிகாகந்த வித்தியோதய பிரிவோனாவைத் தோற்றுவித்தவர்
    1) இரத்மலானை தர்மலோகதேரர்
    2) ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கலதேரர்
    3) புலத்கம ஸ்ரீ சுமணதிஸ்ஸதேரர்
    4) வலான சித்தார்த்ததேரர்

- கீழே A, B என்பனவற்றில் காணப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 38ஆம், 39ஆம் ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

A- தரிசு நிலச்சட்டம்

B- நிலத்தை பாழடையச் செய்யும் கொள்கை

38. பிரித்தானியர் ஆட்சிக்கு எதிரான முதலாவது சுதந்திரப் போராட்டம் தொடர்பாக
    1) Aயும் Bயும் சரியானவை
    2) Aயும் Bயும் பிழையானவை
    3) A சரியானது B பிழையானது
    4) A பிழையானது B சரியானது
39. பிரித்தானியர் ஆட்சிக்கு எதிரான இரண்டாவது சுதந்திரப் போராட்டம் தொடர்பாக
    1) Aயும் Bயும் சரியானவை
    2) Aயும் Bயும் பிழையானவை
    3) A சரியானவை B பிழையானது
    4) B பிழையானது B சரியானது
40. நிரல் Aயுடன் நிரல் B இனை பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. ஹென்றி கோட் | A. புகையிரத எஞ்சின் |
| 2. சாமுவெல் மோஸ் | B. தொலைபேசி |
| 3. அலெக்சாண்டர் கிரஹம்பெல் | C. தந்திமுறை |
| 4. ஜோர்ஜ் ஸ்டீவன்சன | D. ரோலர் இயந்திரம் |

    1) ABCD 2) DCAB 3) BDAC 4) DCBA

($40 \times 2 = 80$ புள்ளிகள்)



kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்
## கா.பொ.த.(சாதாரணதர)ப்பரீட்சை - 2019
## இரண்டாம் தவணை

| வரலாறு II | 33 | T | II | நேரம்:- மூன்று மணித்தியாலம் |
|---|---|---|---|---|

**கவனிக்க:-**
(i) பகுதி I இன் முதலாம் வினா கட்டாயமானது
(ii) பகுதி II இல் இருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி III இல் இருந்து ஒரு வினாவுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.
(iii) எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

**மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடங்கள்**
வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

### பகுதி I

(1) (அ)கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்திலும் (ii) இல் தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள உலகப்புறவுருவப் படப்பகுதியிலும் குறித்துப் பெயரிடுக.

(i) தெதுறு ஓயா, களனி கங்கை, கலாவாவி, ஜம்பு கோளப்பட்டினம், ஆனையிறவு, தேவநகரம், மாத்தளை அலுவிகாரை, பாகியன்கல, சல்வத்தொட்ட, கந்தளாய்க்குளம், உதிநகரம், கன்னொருவ

(12 புள்ளிகள்)

(ii) மலக்கா நீரினை, செங்கடல், சுமத்திரா, தாமிரலிப்தி, தாய்லாந்து, இத்தாலி

(6 புள்ளிகள்)

(ஆ)(i) பின்வரும் A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A- மகாவம்சத்தை எழுதிய மகாநாம தேரர் வாழ்ந்த பிரிவேனாவின் பெயர்
B- சேனைப் பயிர்ச்செய்கையில் அறவிடப்பட்ட "கெதிஅட" "கெடுகனக" ஆகிய இருவரி அறவீட்டையும் நீக்கிய மன்னன்
C- போத்துக்கேயர் இலங்கைக்கு வருகை தந்த போது கோட்டை இராச்சியத்தினை ஆட்சி செய்த மன்னன்
D- இலங்கையின் முதன்மையான நீதிமன்றமான உச்ச நீதிமன்றத்தின் தலைவரின் பதவிப்பெயர்

(4 புள்ளிகள்)

- A, B ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலக்க ஒழுங்கில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

(ii)

1. இச் சித்திரத்தில் காணப்படும் **இருவரினதும்** பெயர் யாது?
2. இச்சித்திரம் வரையப்பட்டுள்ள தேவாலயத்தின் பெயர் என்ன?
3. இச்சித்திரத்தினை வரைந்த கலைஞர் யார்?
4. இச்சித்திரம் வரையப்பட்ட காலப்பகுதி எது?

(4 புள்ளிகள்)



**(A)**


kalvi.lk
பக்கம் 2 ஐப் பார்க்க

(ii)

1. படம் B யில் காட்டப்பட்டிருப்பவரின் பெயர் என்ன?
2. இவரது வம்சத்தின் பெயர் என்ன?
3. ஆங்கிலேயர் கண்டியை ஆக்கிரமித்த போது இவர் தலைமறைவாகி இருந்த இடம் எது?
4. இவரது வீழ்ச்சிக்கு காரணமான பிரித்தானிய அரச உத்தியோகத்தரின் பெயர் என்ன?



(B)

(4 புள்ளிகள்)

2.

(i) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதர்கள் வாழ்ந்த தாழ்நில ஈரவலயக்குகை வசிப்பிடங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) A. வரலாற்றுக்கு முற்பட்ட கால இலங்கையில் மலைப்பாங்கான பிரதேசத்தில் ஏற்பட்ட மண்ணரிப்பினால் உருவாகிய சரளைக்கற்படிவுகள் தாழ்நிலங்களில் புதைந்திருப்பதற்கு காரணமான புவியியற் காலப்பகுதி எது? (2 புள்ளிகள்)

B. மேற் கூறப்பட்ட சரளைக்கற்படிவுகளை தொல்பொருளாளர்கள் எப்பெயர் கொண்டு அழைக்கின்றனர் (2 புள்ளிகள்)

(iii) A – முன்வரலாற்றுக் காலத்தில் ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட கல்லறை மயானங்கள் (Cist burials) **மூன்றினைப்** பெயரிடுக. (3 புள்ளிகள்)

B – ஊவா மாகாணத்தில் முன்வரலாற்றுக் காலத்திற்குரிய மயானங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் போது அஸ்தி (மனிதச் சாம்பல்) பாதுகாப்பதற்காக கையாளப்பட்ட **இரு** விசேடமான முறைகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(iv) இலங்கையில் ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய **மூன்று** பிரதான காரணிகளை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக (6 புள்ளிகள்)

3. கீழ்வரும் A, B, C ஆகிய கூற்றுக்களுடன் தொடர்புபடும் மன்னர்களை ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக

(i)

A- பொருளாதாரத்திற்கு ஆற்றிய பணிக்காக ‘‘மின்னேரியாத் தெய்வம்’’ என்று வழிபடும் அளவிற்கு உயர்வடைந்த மன்னன்

B- வசப மன்னன் ஆட்சிக் காலத்தில் நாகதீபத்தில பியங்க திஸ்ஸ எனும் விகாரையை கட்டிய பிரதேச ஆட்சியாளன்

C- கர்ப்பிணித் தாய்மாரின் தேவைக்காகப் பிரசவ விடுதிகளைக் கட்டுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட மன்னன் (3 புள்ளிகள்)

(ii) மத்திய அரசாங்கத்துடன் தொடர்புடைய மேல்வரும் பணிகளுக்கு பொறுப்பானவர்களின் பதவிப் பெயர்களை அடைப்புக்குறிக்குள் இந்து தெரிவு செய்து A, B, C, D ஒழுங்கு முறையில் எழுதுக.

A- தலைமை அமைச்சராகப் பணியாற்றியவர்

B- நகர கட்டிட நிர்மாணி

C- அரசனின் குதிரைப் பிரிவின் தலைவர்

D- அரச ஆவணங்களின் தலைவர்

(படகரிக, பதகு, மஹமத, நகரகுத்திக, அச அதெக, ஹதி அதெக, கனபெடிக, நகரவடிக)

(4 புள்ளிகள்)



பக்கம் 3 ஐப் பார்க்க

kalvi.lk

(iii) புராதன இலங்கையில் முன்னேற்றமடைந்திருந்த **மூன்று** கைத்தொழில்களைக் குறிப்பிட்டு **இரண்டினைச்** சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) புராதன இலங்கையின் நடைமுறையில் இருந்த பொருளாதார அமைப்பில் விவசாயத்தில்
A- நெற்செய்கை
B- விலங்கு வேளாண்மை ஆகியன மேற்கொள்ளப்பட்ட முறைகளை விளக்குக. (6 புள்ளிகள்)

4.

(i) பொலநறுவை இராசதானியின் வீழ்ச்சிக்குரிய காரணங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) தம்பதெனிய இராசதானியில் ஆட்சி புரிந்த இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் அரசியல் நடவடிக்கைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) A-குருநாகல் இராசதானியின் முதலாவது மன்னன் யார்? (1 புள்ளி)
B-குருநாகல் இராசதானிக் காலத்தில் எழுதப்பட்ட **நான்கு** இலக்கியங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iv) இலங்கையின் இரண்டாவது நகரமயமாக்கல் காலப்பகுதியில் இடம்பெற்ற வர்த்தக நடவடிக்கைகளை **மூன்று** மூலாதாரங்களை ஆதாரமாகக் கொண்டு விளக்குக. (6 புள்ளிகள்)

5.

(i) கண்டி இராச்சியத்தில் 1ம் இராஜசிங்க மன்னன் கண்டியை ஆக்கிரமித்த போது அதற்கு முகம் கொடுக்க முடியாமல் போத்துக்கேயரிடம் சரணடைந்த **மூவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளை A, B, C, D ஒழுங்கில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.
A- கண்டி இராச்சியத்தின் முதல் மன்னன்
B- முதலாம் இராஜசிங்க மன்னனுக்கு கண்டி இராச்சியத்தை ஆக்கிரமிப்பதற்கு உதவி புரிந்த கண்டி இராச்சிய பிரதானி
C- கண்டி இராச்சியத்தினை மூன்று பிரிவாக பிரித்து அதனை மூன்று இளவரசர்களிடையே பகிர்ந்தளித்த மன்னன்
D- ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரத்தைக் கைப்பற்றிய போது கண்டி இராச்சியத்தினை ஆட்சி செய்த மன்னன்

(iii) 1ம் விமலதர்மசூரியன் கண்டி இராச்சியத்தில் தனது ஆட்சியின் சட்டபூர்வத் தன்மையை நிலைநாட்டிக் கொள்வற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) கண்டி இராச்சிய காலப்பகுதியில்
A – நிர்வாகக் கட்டமைப்பு
B – அரசனின் அதிகாரங்கள் ஆகியன
ஒழுங்கமைக்கப்பட்டிருந்த முறையினை எடுத்துக் காட்டுக. (6 புள்ளிகள்)

6.

(i) இந்தியாவில் பிரான்சியரால் அமைக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்கள் **மூன்றினைப்** பெயரிடுக. (3 புள்ளிகள்)

(ii) மியூரன் குழுவின் பரிந்துரைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) A- 1815 இல் கண்டி உடன்படிக்கை கையொப்பமிட்ட போது பிரித்தானியக் கொடியை கீழே இறக்கி சிங்கக் கொடியை ஏற்றியவர் யார்? (1 புள்ளி)
B- கண்டி உடன்படிக்கையில் முதல் **நான்கு** வாசகங்களிலும் அடங்கியுள்ள விடயங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iv) பிரித்தானியருக்கு எதிராக 1848 ஆம் ஆண்டின் சுதந்திரப் போராட்டம் ஏற்பட்டதற்கான காரணிகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

7.

(i) பின்வரும் விடயங்களுடன் தொடர்புடையவர்களின் பெயர்களை ஒழுங்கு முறைப்படி எழுதுக.

A- 1873 இல் பாணந்துறை விவாதத்தை மேற்கொண்டதன் மூலம் சர்வதேச பிரசித்தி பெற்ற பௌத்த தேரர்

B- முஸ்லீம் மக்களுடைய கல்வி மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டு 1882 முஸ்லீம் நேசன் பத்திரிகையை ஆரம்பித்தவர்

C- வண்ணார் பண்ணையில் அச்சகம் ஒன்றை நிறுவி உதயபானு என்ற பத்திரிகையை வெளியீடு செய்தவர் (3 புள்ளிகள்)

(ii) இலங்கையில் பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்தியதில் ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் ஆற்றிய பணிகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) கோல்புறூக் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியில் தோற்றம் பெற்ற மத்திய தர வகுப்பினரால் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

## பகுதி III

8.

(i) மறுமலர்ச்சிக் காலத்தில் கல்வி மறுமலர்ச்சி ஏற்பட்ட துறைகள் **மூன்றினைத்** தருக. (3 புள்ளிகள்)

(ii) மறுமலர்ச்சிக் காலத்தில் திருச்சபையை விமர்சனத்துக்கு உள்ளாக்கிய **நால்வரின்** பெயர்களைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) A- மறுமலர்ச்சிக் காலத்தில் கலைத்துறையின் வளர்ச்சியில் தாக்கம் செலுத்திய காரணிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

B- மறுமலர்ச்சிக்காலத்தில் வாழ்ந்த சிறப்பான கட்டிடக் கலைஞர்கள் **இருவரைப்**பெயரிடுக (2 புள்ளிகள்)

(iv) ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியால்

A) அரசியல்

B) பொருளாதாரம் ஆகிய துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை சுருக்கமாக விளக்குக (6 புள்ளிகள்)

9.

(i) கைத்தொழில் புரட்சியின் ஆரம்பத்திற்கு அடிப்படையாக அமைந்த **மூன்று** கைத்தொழில் துறைகளைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

(ii) கைத்தொழில் புரட்சியின் காரணமாக விவசாயத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய **இரண்டு** காரணிகளைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iii) கைத்தொழிற்புரட்சி இலங்கையில் செல்வாக்குச் செலுத்திய விதத்தினை **இரண்டு** விடயங்களின் துணையுடன் விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) கைத்தொழில் புரட்சியின் காரணமாக சமூகத்தில் ஏற்பட்ட தீய விளைவுகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)






kalvi.lk

மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்


இரண்டாம் தவணைப்பரீட்சை – 2019

1) அ (I)

சுட்டிலக்கம்………….............................



1) அ (II)




Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்

## க.பொ.த (சாதாரணதர)ப்பரீட்சை - 2019

## இரண்டாம் தவணை

வரலாறு - I,II | விடைகள் | புள்ளித்திட்டம்

### வரலாறு - I

| | | | |
|---|---|---|---|
| 1) 2 | 11) 1 | 21) 4 | 31) 3 |
| 2) 1 | 12) 4 | 22) 2 | 32) 2 |
| 3) 3 | 13) 1 | 23) 1 | 33) 2 |
| 4) 4 | 14) 3 | 24) 4 | 34) 1 |
| 5) 1 | 15) 4 | 25) 1 | 35) 4 |
| 6) 3 | 16) 1 | 26) 2 | 36) 3 |
| 7) 2 | 17) 2 | 27) 3 | 37) 2 |
| 8) 3 | 18) 4 | 28) 2 | 38) 4 |
| 9) 4 | 19) 3 | 29) 4 | 39) 3 |
| 10) 3 | 20) 1 | 30) 1 | 40) 4 |

($40\times 2 = 80$ புள்ளிகள்)

### வரலாறு - I1

1.

(i) அ) இலங்கை புறவுருவப்படத்தில் குறித்தல் (குறிக்கப்பட்ட இலங்கைப் புறவுருவப்படத்தினைப் பார்க்கவும் (12 புள்ளிகள்)

ஆ) உலகப் புற உருவப்படப் பகுதியில் குறித்தல் (குறிக்கப்பட்ட உலகப் புறவுருவப் படப்பகுதியினைப் பார்க்கவும். (6 புள்ளிகள்)

இ) 1. A – திக்சந்த செனவியா பிரிவேனா B – நிஸங்க மல்ல
C – எட்டாம் வீர பராக்கிரமபாகு D – பிரதம நீதிபதி/பிரதம நீதியரசர் (4 புள்ளிகள்)

(ii) 1. தேவதூதர்கள் 2. சிஸ்டைன் தேவாலயம்
3. மைக்கல் ஆஞ்சலோ 4. மறுமலர்ச்சிக்காலம் அல்லது (கி.பி 14 – கி.பி 16 இற்கும் இடைப்பட்ட காலம்) (4 புள்ளிகள்)

(iii) 1. ஶ்ரீ விக்கிரம ராஜசிங்கன் 3. மெதமகநுவர
2. நாயக்கர் 4. ஜோன் டொயிலி (4 புள்ளிகள்)

2.

(i) பாகியன்கல, பட்டதொம்பலென, கித்துள்கல பெலிலென (3 புள்ளிகள்)

(ii) A- பிளைத்தோசின் (2 புள்ளிகள்)
B- இரணைமடுப்படிவு (2 புள்ளிகள்)

(iii) A- யட்டிகல்பொத்த, இப்பன்கட்டுவ, கல்சொஹன் (3 புள்ளிகள்)
B-
1. பச்சைக் களிமண்ணால் செய்யப்பட்ட ஓடம் போன்ற அமைப்பினுள் மட்பாண்டங்களில் அஸ்தி பாதுகாக்கப்பட்டமை
2. பச்சை களிமண் ஓடங்கள் பயன்படுத்தப்பட்டமை நீண்டகாலம் நிலைத்திருப்பதற்கான காரணமாக உள்ளது. (2 புள்ளிகள்)

(iv)
- குடியிருப்புக்கள் கிராமக் சிறு குளங்களை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டமை
- ஆரம்ப காலக் குடியேற்றங்கள் உலர் வலயத்தில் பரவியமையில் வளமான மண் காணப்பட்டமை

- தொழில் ரீதியாக ஒன்றுபட்டு குடியேற்றங்கள் உருவாகியமை
  உ + ம் கசீகாரகாம, மணிகாரகாம, கேவட்டகாம)
- கிராமம் ஒன்றில் 5 – 6 குடும்பங்களே வசித்தமை, சில பெரிய கிராமங்களில் 30 குடும்பங்கள் வரை வசித்தமை.
- கிராமங்கள் வேலியிட்டு எல்லைப்படுத்தப்பட்டமை
- கிராமத்தின் தலைவன் கமிக அல்லது கிராமிக என்பவராவர்.

(மூன்று காரணிகளைக்குறிப்பிட்டு விளக்கினால் 6 புள்ளிகள்)

3.

(i) A- மகாசேனன் B – ரிஷிகிரி அல்லது இசிகிரி C- முதலாம் உபதிஸ்ஸ

(ii) A – மஹுமத B – நகரவடிக (3 புள்ளிகள்)
C – அசஅதெக D – கனபெடிக (4 புள்ளிகள்)

(iii) இரும்புக் கைத்தொழில், செம்பு (தம்பகர), வெள்ளீயம், உலோகக் கைத்தொழில்கள், தங்கக் கைத்தொழில், இரத்தினக் கைத்தொழில், தந்த செதுக்கல் கைத்தொழில், வனைதல் கைத்தொழில், நெசவுக் கைத்தொழில்

(இரண்டினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்கினால் 5 புள்ளிகள்)

(iv)

- நீர்ப்பாசனத்தின் மூலமே நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. வருடாந்தம் இரு போகங்கள் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இது பெரும்போகம், சிறுபோகம் எனக் குறிப்பிடப்பட்டது. இடைப்போகம் பற்றியும் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- நெற்செய்கைக்கு தேவையான நீரைப் பெறுவதற்கு மழை நீரைத் தேக்கி வைப்பதும், ஆறுகளை மறித்து கால்வாய்கள் மூலம் நீரை வயல்களுக்கு அனுப்புவதும் கையாளப்பட்ட முறைகளாகும்.
- விலங்கு வேளாண்மையில் பசுக்கள், கோழிகள், ஆடுகள் வளர்க்கப்பட்டன

(ஆதாரங்களுடன் விளக்கி எழுதினால் 3+3 = 6 புள்ளிகள்)

4.

- பலவீனமான மன்னர்கள் ஆட்சி பீடம் ஏறியமை
- கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு
- பொருளாதார வீழ்ச்சி
- கலிங்க - பாண்டிய வம்சங்களுக்கிடையே ஏற்பட்ட ஆட்சியதிகாரப் போராட்டம்

(மூன்று விடயங்களைக் குறிப்பிட்டால் 3 புள்ளிகள்)

(i)

- கலிங்க மாகனிடம் இருந்து இராசரட்டையைக் கைப்பற்றியமை
- முதலாவது முறையாக சந்திரபானு படையெடுத்த போது அவனை வெற்றி கொண்டமை
- இரண்டாவது முறை (கி.பி 1261 இல்) சந்திரபானு படையெடுத்த போது படுதோல்வி அடைந்ததுடன் சந்திரபானுவும் கொல்லப்பட்டான்

(இரண்டு அரசியல் நடவடிக்கைகளைக்குறிப்பிட்டால்) (4 புள்ளிகள்)

(ii) A- இரண்டாம் புவனேகபாகு (1 புள்ளகள்)

B- தலதா சிரித்த, சிங்கள போதிவம்சம் அனாகத்த வம்சம், தலதலா பூஜாவலிய பன்சிய பனஸ் ஜாதகய
(550 ஜாதகக் கதைகள்) பாளி மொழியில் இருந்து சிங்கள மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்டமை

(நான்கு இலக்கியங்களைக்குறிப்பிட்டால்) (4 புள்ளிகள்)

(iii)

- சீனாவில் இருந்து இலங்கைக்கு பீங்கான் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டமைக்கு தெடிகம பிரதேசத்தில் கிடைக்கப் பெற்ற தொல்பொருட்கள் சான்று பகர்கின்றன.
- உள்நாட்டு வர்த்தகம் தொடர்பாக கடைவீதி இருந்தமை பற்றிக் குருநாகல் விபரம் என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இலங்கையின் மேற்குக்கரையில் கப்பல் துறைகளை அடிப்படையாகக் கொண்டு வளமான வெளிநாட்டு வர்த்தகம் நிலவியதாக கி.பி 1344 ஆம் ஆண்டு இலங்கை வந்த இபின் பதூதா என்னும் தேச சஞ்சாரியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருத்தல்.

(மூன்று காரணிகளைக் குறிப்பிட்டு விளாக்கினால் 6 புள்ளிகள்)

5.

(i) கரலியத்தபண்டார, குசுமாசனதேவி, யமசிங்க பண்டார, கோணப்பு பண்டார

(மூவரைக் குறிப்பிட்டால் 3 புள்ளிகள்)

(ii) A - சேனசம்பந்த விக்கிரமபாகு
B - வீரசுந்தரபண்டார
C - செனரத்
D - இராஜாதி இராஜசிங்கன்

(4 புள்ளிகள்)

(iii)

- ரோமன் கத்தோலிக்க சமயத்தை கைவிட்டு பௌத்த சமயத்தைப் தழுவிக் கொண்டமை
- விமலதர்மசூரியன் என்ற பௌத்த நாமத்தை சூடிக் கொண்டமை
- கண்டி இராச்சியத்தின் அரசுரித்தாளியான குசுமாசனதேவியைத் திருமணம் செய்து கொண்டதன் மூலம் தனது ஆட்சியுரிமையை நிலைநாட்டிக் கொண்டமை
- சீதாவாக்கையில் தெல்கமு விகாரையில் இருந்த புனித தந்தத்தை கண்டியில் பிரதிஷ்டை செய்தமை

(இரண்டினைக் குறிப்பிட்டு விளக்கினால் 5 புள்ளிகள்)

**(iv)** A – **நிர்வாகக் கட்டமைப்பு**

- கண்டி இராச்சியத்தின் நிர்வாக அமைப்பில் முதன்மை நபர் அரசன்
- மன்னனுக்கு உதவுவதற்காக பிரதானிகள் இருவர் இருந்தனர்
- அரசசபை அரசின் முக்கிய விடயங்களைக் கலந்துரையாடுவதற்கு காணப்பட்டது
- அரசரின் தலைமையில் கூடும் அச்சபைக்கு பிரதானிகள், திசாவைகள், தலைமைச் செயலாளர், பிரதேச செயலாளர்கள் சமூகமளித்தனர்
- அரசரின் நேரடி நிர்வாகத்திற்கு அரச மாளிகைச் சேவைகள் உட்பட்டிருந்தன

✴ **அரசனின் அதிகாரங்கள்**

- நாட்டின் உயர் அதிகாரம் அரசனுக்கு உரியது
- நாட்டின் அமைதியை பேணுவது, பாதுகாப்பை வழங்குவது பிரதான செயற்பாடாகும்
- நாட்டில் உயர் நீதித்துறை அதிகாரம் மன்னனிடம் இருந்தது
- சம்பிரதாய பூர்வமான முன்னைய நடைமுறைகளுக்கமைய மன்னன் செயற்பட வேண்டி இருந்தது.
- நாட்டின் அனைத்து அரசியல் கருமங்களும் பொருளாதார செயற்பாடுகளும் நிர்வாகப் பணிகளும் அரசனைத் தலைமையாகக் கொண்டே செயற்பட்டன.
- குற்றவாளிகளுக்கு மரணதண்டனை வழங்கும் அதிகாரம் மன்னனுக்கு மட்டுமே இருந்தது

(6 புள்ளிகள்)

6.

(i) பாண்டிச்சேரி, காரைக்கால், சந்திரநாகூர் or சந்திரநகர் (3 புள்ளிகள்)

(ii) A- வாரியப்பொல ஸ்ரீ சுமங்கல தேரர் (1 புள்ளி)

B- முதல் மூன்று வாசகங்களும் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க மன்னனுக்கும் அவரது உறவினர்களுக்கும் கண்டி இராச்சிய சிம்மாசனத்தின் மீதிருந்த சகல உரிமைகளையும் நீக்கிவிட்டது.

நான்காம் வாசகம் கண்டி இராச்சியம் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டது என்பதுடன் மலைநாட்டு பிரதானிகளின் உரிமைகளும், சலுகைகளும் பாதுகாக்கப்படும் வகையில் ஆங்கிலேயர் ஆட்சி நடைபெறும். (4 புள்ளிகள்)

(iii) வரி வசூலிப்பதில் ஈடுபட்டிருந்த சென்னை உத்தியோகத்தர்கள் திருப்பி அனுப்பப்பட்டு அவர்களுக்கு பதிலாக சுதேச உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துதல்

- தெங்கு வரி உட்பட புதிய வரிகள் நீக்கப்படுதல்
- வரி வசூலித்தலுக்கும் நீதி வழங்குவதற்கும் வெவ்வேறான உத்தியோகத்தர்கள் அமர்த்தப்படுதல்
- ஒல்லாந்தரின் நீதிமன்ற முறையை மீண்டும் தாபித்தல்

(எவையேனும் இரண்டினைக் குறிப்பிட்டால் 4 புள்ளிகள்)

(iv) கோல்புறூக் சீர்திருத்தங்களின் செல்வாக்கு, அரசின் புதிய வரிக் கொள்கை இரண்டும் பிரதானமானவை.

- அரசின் நிலக் கொள்கை
- கிராம சபைகள் செயலற்றுப் போனமை
- புதிய நீதிமன்ற முறை
- அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பு விலகிச் சென்றமை
- அரசியன் புதிய வரிக்கொள்கை

(மூன்று விடயத்தினை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்கினால் 6 புள்ளிகள்)


kalvi.lk

7.

(i) A - மிக்கெட்டுவத்த குணானந்த தேரர்

B – M.C.M சித்திலெப்பை

C - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் (3 புள்ளிகள்)

(ii)

- வெசாக் பௌர்ணமி தினத்தினை விடுமுறை நாளாக்கியமை
- பௌத்த பாடசாலைகளை இலங்கையின் முக்கியமான நகரங்களில் நிறுவியமை
- பௌத்த பிரம்மஞான சங்கத்தை நிறுவியமை
- இன்று வரை பயன்படுத்தப்படும் பௌத்த சமயக்கொடியை உருவாக்கியமை

(நான்கு விடயங்களைக் குறிப்பிட்டால் 4 புள்ளிகள்)

(iii)

- சட்டவாக்கக்கழகம், சட்ட நிருவாகக் கழகங்கள் அமைக்கப்பட்டமை
- மலைநாடும் கரையோரப் பிரதேசங்களும் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே ஆட்சி முறையின் கீழ் கொண்டு வரப்பட்டமை
- நாடு ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டமை
- கட்டாய அரச கரும முறை ஒழிக்கப்பட்டமை
- அரசின் வர்த்தக ஏகபோக முறை அகற்றப்பட்டமை

(இரண்டினைக்குறிப்பிட்டு விளக்கினால் 5 புள்ளிகள்)

(iv)

- புதிய மத்திய தர வகுப்பினர் தோற்றம் பெற்றமை
- மத்திய தர வகுப்பினர் ஆங்கிலக்கல்வி மூலம் தொழில் வாய்ப்புக்களைப் பெற்று உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அனுபவித்து சமூக அந்தஸ்த்தையும் பெற்றுக் கொண்டனர்.
- பழைய நிலப்பிரபுக்கள் வகுப்பு இல்லாது ஒழிந்தது
- புதிய மத்திய தர வகுப்பினர் கல்வி சுற்றவர்கள் ஆதலால் அரசியல் ரீதியாகச் செயற்படுபவர்களாக இருந்தனர்
- முதலாளித்துவ பொருளாதார முறைக்கு வித்திட்டமையால் மரபு ரீதியாகப் பணம் சம்பாதிக்கும் முறைக்கு பதிலாக பணம் சம்பாதிக்கும் பல்வேறு வழிகள் திறந்து விடப்பட்டன.

(மூன்று விடயங்களை விளக்கி எழுதினால் 6 புள்ளிகள்)

8.

(i) மொழி, இலக்கியம், சிற்பம், சித்திரம், கட்டிடக்கலை (மூன்று துறைகளைக் குறிப்பிட்டால்) (3 புள்ளிகள்)

(ii) ஜோன் வைக்கிளிப், ஜோன் ஹஸ், இராஸ்மல், மாட்டின் லூதர் (நால்வரையும் குறிப்பிட்டால்) (4 புள்ளிகள்)

(iii) A)

- கலைஞர்களை ஆதரிக்க செல்வந்தர்கள் முன்வந்தனர்
- மானிடவாதத்தின் விளைவாக கலைஞர்கள் சுயமாகச் செயற்பட்டுத் தமது படைப்பினை வெளிக்கொணரத் தொடங்கினர்
- கலைப்படைப்புக்கள் அவைகளை ஆக்கியோரின் பெயரில் வெளிவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன
- சமயக் கருத்துக்களுக்கு முதலிடம் கொடுப்பதற்குப் பதிலாக உலகியலை முதன்மையாகக் கொண்ட கலைப்படைப்புக்கள் தோற்றம் பெற்றன. (மூன்றினைக் குறிப்பிட்டால் 3 புள்ளிகள்)

B- பிரமத்தே, மைக்கல் ஆஞ்சலோ, லியானடோடாவின்சி, ராபயல்

(இருவரைக் குறிப்பிட்டால் 2 புள்ளிகள்)

(iv) **அரசியல்**

- தேசிய அரசுகள் தோன்றியமை, அரசியல் துறையில் ஏற்பட்ட மாற்றமாகும். அரசியலில் அரசன் முக்கியத்துவம் பெற்றார்.
- அதிகாரங்கள் அரசனை மையமாகக் கொண்டு விளங்கின
- மத்தியதர வகுப்பினரின் தோற்றம் இவர்கள் சமூகத்தில் வலிமை பெற்றனர். தேசிய அரசுகளின் அரசர்கள் மத்திய வகுப்பினரின் உதவியைப் பெற்றுக் கொண்டனர்.

**பொருளாதாரம்**

- சுயதேவை பொருளாதாரமுறை மாற்றமடைந்து வர்த்தக முன்னேற்றம் ஏற்பட்டது.
- வர்த்தகத்தை விரிவடையச் செய்ய அரச அனுசரணை கிடைத்தமை
- நாடுகாண் பயணங்களின் விளைவாகப் புதிய கடல் வழிகள் கண்டுபிடிக்கப்பட்டமை இதனால் வர்த்தக வளர்ச்சி ஏற்பட்டமை
- வர்த்தக வளர்ச்சியின் காரணமாக பணப்புழக்கம் அதிகரித்தது இதனால் காசோலை முறையும் வங்கி முறையும் ஆரம்பமாகின.

(6 புள்ளிகள்)

9.

(i) * இரும்பு உருக்குக் கைத்தொழில், நெசவுக் கைத்தொழில்

* நிலக்கரிக்கைத்தொழில் (3 புள்ளிகள்)

(ii)

- பாரிய விவசாயப் பண்ணைகள் உருவாக்கப்பட்டமை
- சுழற்சிமுறை நிலமாற்றுமுறை பயிர்ச்செய்கை
- விலங்கு வளர்ப்பில் புதிய தொழில்நுட்ப முறைகள் பயன்படுத்தப்பட்டமை
- புதிய விவசாய முறைகளும் நவீன உபகரணங்களின் பயன்பாடும்

(இரண்டினைக் குறிப்பிட்டால் 4 புள்ளிகள்)

(iii)

- இலங்கையில் வங்கி முறை ஆரம்பிக்கப்பட்டமை
- பெருந்தெருக்களும் புகையிரத வீதிகளும் அமைக்கப்பட்டமை
- தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டமை
- தந்திமுறை 1858 ஆம் ஆண்டு முதல் செய்தி பரிமாறும்முறை அறிமுகம் செய்யப்பட்டது.
- தேயிலை, கோப்பி, இறப்பர் ஆகிய பெருந்தோட்ட உற்பத்திகளுக்கு தேவையான இயந்திர சாதனங்கள் பிரித்தானியாவில் இருந்து தருவிக்கப்பட்டன

(இரண்டு விடயங்களைக் குறிப்பிட்டு விளக்கினால் 5 புள்ளிகள்)


(iv)

- உழைக்கும் வர்க்கத்தினரின் வாழ்க்கைத்தரம் கவலைக்கிடமானதாக காணப்பட்டமை
- ஐரோப்பாவில் பாரிய நகரங்கள் தோன்றியதால் சனநெருக்கடி அதிகரித்து அதனால் அடிப்படை வசதிகள் மிகக் குறைவாகக் காணப்பட்டமை
- வகுப்பு ரீதியான சமூகவமைப்பு தோற்றம் பெற்றமை
- சூழல் மாசடைதல்


(மூன்று விடயங்களைக் குறிப்பிட்டு விளக்கினால் 6 புள்ளிகள்)

**மாகாணக்கல்வித்திணைக்களம் - வடக்கு மாகாணம்**
**இரண்டாம் தவணைப்பரீட்சை - 2019**

1) அ (1)



1) அ (II)



Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page